1970 ஆகஸ்ட் 31]

* 155 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் கணக்குப் பிரிவை 1—7—1969-ம் தேதி முதல் மாவட்ட அளவில் நடை முறைக்குக் கொண்டு வந்ததின் மூலம் கடன் பெறுவோருக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் யாவை?

மாண்புமிகு சி. பா. ஆதித்தனார்: கடன் தொகையை, கடன் பெறுவோர் விரைவில் பெறுகின்றனர்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங் களில் கடனுக்கு விண்ணப்பித்துக் கொள்ளக் கூடியவர்கள் மாவட்ட அளவிலே அலுவலகங்கள் இருந்தாலும்கூட சென்னைக்கு அந்த ரிக்கார்டுகளை அனுப்பிப் பெற்றுதான் தர முடியும் என்கிறார்கள். இன்னும் விரைவாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் கூறியது, முன்னாலே நில அடமான வங்கிகள் என்று இருந்தபோது. ஆனால் நிலவளவங்கிகள் என்று ஆனபிறகு, மாவட்ட அளவிலேயே முடிவு எடுக்குமாறு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, நிலவள வங்கியில் அடிக்கிணறு வெட்டுவதற்கும், பம்ப் செட்டுகள் வைப்பதற்கும் பணம் கொடுப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். மதுரை மாவட்டத்திலிருந்து தகவல் வந்திருக்கிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. மூலக் கேள்வி எல்லா மாவட்டங்களிலும் கணக்குப் பிரிவை நடைமுறைக்குக் கொண்டு வந்ததைப்பற்றி.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த நில வள வங்கிகள் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. முன்னாலேயே சர்க்கா ரிடம் கடன் இருந்தால் அது தீர்ந்த பிறகுதான் நில வள வங்கி மூலம் கடன் கொடுக்க இயலும் என்று சொல்லுகிறார்களே, இது அமைச்சருக்குத் தெரியுமா? இதனால் நில அபிவிருத்திக்கோ, கிணறு வெட்டுவதற்கோ, பம்ப் செட்டுகளை வைப்பதற்கோ தடங்கல் ஏற்படுகிறது. பழைய கடன் இருந்தால் அந்தக் கடனையே உள் ளடக்கி வேறு கடன் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இது பற்றி அமைச்சருக்குத் தெரியும். இதுபற்றித் தீவிரமாக அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது.

Supermarkets.

* 156 Q. THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether any supermarket is to be set up at Kancheepuram shortly; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) இச் சிறப்பங்காடியைத் திறப்பதற்காக செங்கல்பட்டு மாவட்ட விநியோக விற்பனைச் சங்கத்திற்குப் பங்குத் தொகையாகவும் மானியத் தொகையாகவும் கடன் தொகையாகவும் இரண்டு லட்சத்து இரண்டாயிரம் ரூபாய் நிதி உதவியைத் தமிழக அரசு அளித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, வேறு எந்த எந்த ஊர்களிலே இதுபோன்ற சிறப்பு அங்காடிகளைத் திறக்க இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களிலும் திறந்துகொண்டு வருகிறோம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்த சிறப்பு அங்காடிகள் ஜனத்தொகை அதிகமாக உள்ள நகரங்களில் திறக்கப்படுகின்றனவா அல்லது எங்கே அதிகமாக வியாபாரம் நடக்கிறதோ அந்த இடத்திலே திறக்கப்படுகின்றனவா, எந்த அடிப்படையிலே ஆங்காங்கு திறக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்பொழுது சிறப்பு அங்காடிகள் ஜனத்தொகையை அடிப்படையாக வைத்துத் திறக்கப்படுகின்றன. இந்த சிறப்பு அங்காடிகளிலே இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று, பெரிய சூப்பர் மார்க்கெட், இன்னொன்று, "மினி" அதாவது, சிறிய சிறப்பு அங்காடி என்பது. ஜனத்தொகையின் அடிப்படையில் இருவகை சிறப்பு அங்காடிகளும் திறக்கப்படுகின்றன.

திரு. கே. விநாயகம் : காஞ்சி மாநகரிலே திறக்கப்பட இருக்கிறதற்கு எவருடைய பெயர் வைக்கவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எந்தப் பெயர் வைக்க வேண்டுமென்று திரு. விநாயகம் விரும்புகிறார்கள் என்பதை சட்டமன்றத்திற்கு, அவர்கள் தெரிவிக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தச் சிறப்பு அங்காடியைத் திறப்பதன் நோக்கமே ஓப்பன் மார்க்கட்டில் விற்பனையாகிற விலைக்குக் குறைந்த விலைக்குப் பொருள்களைக் கிடைக்கச் செய்வது தான். ஆனால் சிறப்பு அங்காடிகளிலே ஓப்பன் மார்க்கட் விலையை விட அதிகமாக விற்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? சென்னையில் காவிரி சூப்பர் மார்க்கட்டில் ஒரு கிலோ மிளகாய் வத்தலுக்கு அதைவிட அதிகமாக 20 பைசாவுக்கு சாத்தூரிலே வழங்கப்படுகிறதே அதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இது விஷயமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மதிப்பிற்குரிய உறுப்பினர் சொல்வதைப்போல, குறைந்த விலைக்குக் கொடுப்பதற்காகத் தான் சிறப்பு அங்காடிகள் திறக்கப்படுகின்றன என்பது மட்டுமல்ல,

சரக்கின் தரம் அதைவிட முக்கியம். சரக்குகளின் தரங்களை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சிறப்பு அங்காடிகளில் தரமுள்ள சரக்குகள் குறைவான விலைக்குக் கிடைக்கும்.

*157 Q.—THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the employees of the Super-market (Karpagam) at Vellore have been given a notice of recovery for the shortages in various sections of the Co-operative Society; and

(b) whether opening stocks were allowed to be verified by the employees from whom the recoveries have been ordered?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: (அ) ஆம்.

(இ) சரக்குகளைப் பெற்றுக்கொண்டதற்கு எழுத்துமூலம் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, what is the total number of Supermarkets that are working in our State—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி வேலூர் சூப்பர் மார்க்கெட் பற்றியது.

திரு. கே. விநயகம்: வேலூர் கற்பகம் சூப்பர் மார்க்கட்டில் என்ன தவறு நடந்து இருக்கிறது? எவ்வளவு கையாடல் செய்து இருக்கிருர்கள்? அப்படிச் செய்தவர்கள் நிர்வாகத்தில் இருப்பவர்களா? என்ன தண்டனை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது? அவர்களிடமிருந்து வசூல் செய்வதோடு அவர்கள் செய்த குற்றத்திற்காக என்ன தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: தலைவர் அவர்களே, பணம் கையாடல் என்பதல்ல. சரக்குகள் இருப்பு குறைவாகக் காணப்பட்டது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கையெழுத்திட்ட அளவுக்குச் சரக்குகள் இல்லையென்றதால் குறைவாக இருப்பதற்காக, பணத்தை வசூல் செய்வதற்கு, நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்காக, குற்றப் பிரிவிலே, கிரிமினல் வழக்குப் போடுவது என்ருல், எந்த அளவுக்குக் குறைவு செய்திருக்கிருர்கள் என்று தெரியவேண்டியிருக்கிறது. ஆகவே முதலில் நஷ்டத்தைச் சரிக்கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகள்

* 158 வினு:—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு அதிகப்படியாக E. S. I. மருத்துவ மனைகளை ஏற்படுத்த உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: தலைவர் அவர்களே, தற்போது இல்லை.